## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 84/2024

| | |
|---|---|
| Ranking of Witness | PW.1 |
| Name | வசந்தா |
| Husband Name | பழனி |
| Age | 52 |
| Address | எண்.6, வெள்ளகுளம், தேசுமுகிபேட்டை, திருக்கழுக்குன்றம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2026.

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

**குறுக்கு விசாரணை –**

நான் இந்த மனுவின் மனுதாரர். சட்ராஸ் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். எனது வீட்டிலிருந்து சட்ராஸ் மருத்துவமனை 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. தினமும் பணிக்கு ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் செல்வேன். 9.10.2023 ம் தேதி மாலை 3.30 மணிக்கு சட்ராஸ் மருத்துவமனையிலிருந்து பணி முடித்து வீட்டிற்கு ஸ்கூட்டி வாகனத்தில் சென்றபோது, விபத்து ஏற்பட்டது. அந்த வாகனத்தின் எண் ஞாபகம் இல்லை. எனது பணி நேரமானது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையாகும். சம்பவம் நடைபெற்ற போது நேரம் மாலை 3.30. விபத்து சம்மந்தமாக சட்ராஸ் காவல் நிலையத்தில் என் கணவர் பழனி தான் புகார் அளித்தார். விபத்தானது TN19AX4770 Yamaha Ray Z இருசக்கர வாகனத்தில் நான் சென்ற போது ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சட்ராஸ் மருத்துவமனையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மெய்யூர், பிள்ளையார் கோவில் குளம் அருகில் விபத்து ஏற்பட்டது. எதிரில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. நான் சாலையின் இடது புறமாக சென்றேன். விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு மயக்கம் வந்தது. அருகிலிருந்தவர்கள் எனக்கு சிகிச்சைக்காக சட்ராஸ் மருத்துவமனையில்

R. Vasanta
12/5/2026

சேர்த்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அன்றைய தினமே மாற்றப்பட்டு, சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டேன். விபத்தில் எனது இடதுபுற தோள்பட்டை எலும்பு உடைந்து காயம் ஏற்பட்டது. உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டது. அதன்பிறகு, மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு பாலாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 3 நாட்கள் சிகிச்சைப் பெற்றேன். மருத்துவ செலவுகள் ரூ.1,28,835/- செலவானதற்கான பில்களை தாக்கல் செய்தேன். அது அல்லாமல் ஒரு ஆண்டிற்கு பிறகு திருக்கழுக்குன்றம் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றேன். இழப்பீடு அதிகம் பெறுவதற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் தான் ம.த.சா.ஆ.14 என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை இ.த.ச பிரிவுகள் 279, 337ன் கீழ் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையோ, இறுதி அறிக்கையோ வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து 2½ ஆண்டுகள் ஆகிவிட்டதால் என்னால் எல்லா வேலைகளும் நல்ல முறையில் செய்யமுடியும் என்றும், உடல் நிலை சரியாக இயங்கவில்லை என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு அதிகம் பெறுவதற்காக காயத்தின் தன்மையை அதிகப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் சரியான திசையில் சாலை விதிகளின் படி வந்தது என்றும், நான் தான் திடீரென்று சாலையின் குறுக்கே கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்திற்கு காரணம் நான் தான் என்றும், அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்ததக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. ராஜ் மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். ராஜ் மருத்துவமனையில் வழங்கப்பட்டதாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் நகல்களை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், Discharge Summaryல் மருத்துவரின் கையெழுத்துகள் இல்லை என்றும், அதனால் அந்த ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.15 ஆவணத்தின் படி பிடித்தம் போக மாத ஊதியமாக ரூ.34,922/- பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

R. Vanitha
12/5/2026

அந்த ஆவணம் 2023ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கானது என்றால் சரிதான். சம்பவத்தில் எனக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டது என்றும், இழப்பீடு அதிகம் பெறுவதற்காக பொய்யான ஆவணங்களை முன்னிலைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

R. Vasantha
12/5/2026

**மறுவிசாரணை - இல்லை**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 12.05.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

12/5/2026

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.

mcop 84/24

pw1